# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவஞ்சல் ஒப்புகையுடன் :

நகர் ஊரமைப்பு துறை

அனுப்புநர்

ச.அண்ணாதுரை. பி.இ.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவண்ணாமலை மாவட்டம்,
27, மணலூர்பேட்டை சாலை,
திருவண்ணாமலை – 606 601.
தொலைபேசி – 04175-290344.
emaiid-dtcp.tiruvannamalai@gmail.com

பெறுநர்

செயல் அலுவலர்,
கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி,
கீழ்பென்னாத்தூர் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

ந.க.எண்.520/2020/தி.மலை

நாள்22.02.2022.

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – திருவண்ணாமலை மாவட்டம் – கீழ்பென்னாத்தூர் வட்டம் / பேரூராட்சி / கிராமம் – சர்வே எண்கள்.84/1பி1 மற்றும் 1பி2 ஆகியவற்றில் 1.41 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் – தொர்பாக.

பார்வை :

1. மனுதாரர், கடிதம், நாள்.09.02.2022 (இணையதள விண்ணப்பம் எண்.20200650101 6240, நாள்.01.08.2020).
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்.12.01.2022.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/போ, நாள். 24.12.2020.
4. மனுதாரர், திரு.பெருமாள் அவர்களின் கடிதம், நாள்.22.09.2020.
5. அரசாணை(நிலை)எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)]த் துறை, நாள்.04.06.2004.
6. அரசாணை(நிலை)எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)]த் துறை, நாள்.04.05.2017,
7. அரசாணை(நிலை)எண்.18, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
8. அரசாணை(நிலை)எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)]த் துறை, நாள்.23.09.2020.
9. அரசாணை(நிலை)எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)]த் துறை, நாள்.09.12.2020.
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிதுறை, நாள்.30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்1383/2017/LA1, நாள்.08.09.2017.

– – –

பார்வை 1–ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பார்வை 2–ல் சுட்டிய இவ்வலுவலக 12.01.2022 நாளிட்ட கடிதம் மூலம், மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 4–ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக, தானப்பத்திர எண்.182/2022, நாள்.31.01.2022–ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1. மனைப்பிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி, ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு <u>**ம.வ/ந.ஊ.உ.இ(தி.மலை)எண்.39/2022**</u> என எண்ணிடப்பட்டு, இரண்டு அசல் வரைபடங்கள், இரண்டு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.
2. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது, மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)–ன்படி, அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.
4. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை :</u>

1. (a) **பார்வை 6–ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7–ல் கண்ட** TNCDBR-2019 **விதி எண்.47(11)–ன்படியும், மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில்** "Collecting the necessary fees including the charges for providing amenities like roads. Storm water drains and street lights form the applicants". After collecting the necessary fees the final layout sketch. Permit of Planning Authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) **மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில்** "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of Planning Authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) **பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும்,** (EWS) **மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020–ன்படி, EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.**

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>

| வ. எண் | விவரம் | – | பரப்பளவு விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | – | 0.57.00 ஹெக்டேர் அல்லது 1.41 ஏக்கர் |
| 2 | ஒதுக்கிய மனைகள் | – | 35+1 கடை |
| <u>பொது ஒதுக்கீடு</u> (மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது.) | | | |
| 1 | பூங்கா | – | 02.02.2022–ல் ரூ.23,000/– வழிகாட்டி மதிப்பு தொகை செலுத்தப்பட்டுள்ளது. |
| 2 | உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடுக்குகள் | – | --- |
| 3 | உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு (Over Head Tank) | – | 22.99 ச.மீ (0.62%) |
| 4 | தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது (Transformer Yard) | – | 22.79 ச.மீ (0.61%) |

ச. [signature] 22/02/2022
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
திருவண்ணாமலை மாவட்டம்.

[initials] 22.2.22

## கீழ்பென்னாத்தூர் செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ஆணை
## முன்னிலை: திரு. பெ.ஜெயபிரகாஷ்.,

ந.க.எண். 13/2022 நாள்: 27.05.2022

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 – திருவண்ணாமலை மாவட்டம் – கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண்.84/1B1A & 1B2ல் 1.41 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவு – தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது – வரன்முறைப்படுத்தி இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடல் தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.எ.4(3), நாள். 04.05.2017
2. அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.எ.4(3), நாள். 13.10.2017
3. கீழ்பென்னாத்தூர் பேரூராட்சிமன்ற சாதாரண கூட்ட தீர்மான எண்.17 நாள்.30.03.2022
4. கீழ்பென்னாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண பதிவு எண்.180/2022 நாள்.31.01.2022
5. மனைப்பிரிவு வரைபடத்திற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட ம.வ./ந.ஊ.உ.இ(திமலை) எண்.39/2022 நாள்.22.02.2022
6. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்களது ந.க.எண்.520/2020/தி.மலை நாள்.22.02.2022
7. நிலப்பயன் மாற்றக்கட்டணம் ரூ.9425/– (IFHRMS Challan No.20220516007519 நாள்.16.05.2022)
8. இளநிலை பொறியாளர், சேத்துப்பட்டு பேரூராட்சி (தலைமையிடம்) அறிக்கை நாள். 27.05.2022
9. கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்ட கூராய்வு கட்டணம் ரூ.35,000/– செலுத்தச்சீட்டு எண்.155/2022–23 நாள்.27.05.2022
10. தொடர்புடைய ஆவணங்கள்.

*******

**ஆணை :–**

பார்வை–1 மற்றும் 2ல் காணும் அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையிலும், பார்வை–6ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்களது நடவடிக்கைகளின்படி கீழ்பென்னாத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.84/1B1A & 1B2ல் 1.41 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட விபரப்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1) மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : 1.41 ஏக்கர் |
| 2) மனைப்பிரிவில் அமைந்துள்ள மொத்த மனைகளின் எண்ணிக்கை | : 35 |
| 3) விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : – |
| 4) விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : 35 |
| 5) விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பு | : 1.41 ஏக்கர் |
| 6) உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடுக்குகள் | : 1809.20 ச.மீ |
| 7) உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு (OHT) | : 22.99 ச.மீ. |
| 8) TNEB (Transformer Yard) | : 22.79 ச.மீ. |

மேலும், விற்கப்படாத மனைகளுக்கு உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடுக்குகள், உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு Over Head Tank மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு Transformer Yard ஆகியன கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் பெயருக்கு பார்வை 4–ன்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அளவீடு செய்யப்பட்டு பார்வை–8ல் காணும் இளநிலை பொறியாளர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அனுமதியற்ற மனைப்பிரிவுக்கு வரன்முறைப்படுத்தப்படும் விற்கப்படாத மனைகளுக்கு நிலப்பயன் மாற்றக்கட்டணம் ரூ.9425/– பார்வை–7ல் காணும் விவரப்படியும், பார்வை–9ல் காணும் கூராய்வு கட்டணமாக ரூ.35,000/–ம் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில், மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்களால் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் இப்பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.84/1B1A & 1B2ல் 1.41 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை இறுதி ஒப்புதல் அளித்து வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படுகிறது.

<u>தற்போது இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் மனைகள் விவரம்</u>

| சர்வே எண்கள். | விற்கப்படாத மனை எண்கள் | மனைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 84/1B1A & 1B2 | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34 மற்றும் 35 | 35 |

<u>நிபந்தனைகள்</u>

1. தற்போது அங்கீகரிக்கப்படும் மனைப்பிரிவு எந்த ஒரு அறிக்கையின் மூலமும் கேட்டுக்கொள்ளாமலோ (அ) செயல் அலுவலரின் ஆணையோ இல்லாமல் எந்த மாற்றமும் செய்யக்கூடாது.
2. இந்த மனைப்பிரிவினை எந்த நேரத்திலும் செயல் அலுவலரோ (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரோ பார்வையிட முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.
3. உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலைக்கு ஒப்படைக்கப்பட்ட OSR Land இதர வகையான இடங்களை எக்காரணத்தை கொண்டும் விற்பனை செய்யவோ, ஆக்கிரமிப்பு செய்யவோ கூடாது.
4. தற்பொழுது வழங்கப்படும் மனைபிரிவு சம்பந்தமாக தணிக்கையில் ஆட்சேபனை எழுப்பப்பட்டாலோ (அ) வேறு ஏதேனும் புகார் பெறப்பட்டாலோ அதற்கு தாங்களே முழுப்பொறுப்பாகி அதனால் ஏற்படும் இழப்புகளை தங்களது இதர சொத்துக்களின் மூலம் கீழ்பென்னாத்தூர் பேரூராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.
5. மேற்காணும் நிபந்தனைகள் அனைத்தையும் செயல்படுத்த தவறினால் எந்த ஒரு முன்னறிவிப்பும் இன்றி செயல் அலுவலரால் அளிக்கப்பட்ட அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.
6. வரன்முறைப்படுத்தப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவின் பரிசீலனைக்கு நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ, வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அனுமதியினை ரத்து செய்ய மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்களுக்கு பரிந்துரை செய்து தொழில்நுட்ப அனுமதி ரத்து செய்யப்படும்.
7. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை வரன்முறைப்படுத்தப்பட்டு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் அளிக்கப்பட வேண்டும்.
8. விதிகளின்படி வரன்முறைப்படுத்தி மனையில் அமையும் கட்டிடம் வரன்முறைப்படுத்தியதற்கு பொறுப்பாகாமை ஆகும். மனையின் உரிமையாளர் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் உரிமம் பெற முறையாக விண்ணப்பித்து வரையறைகளின்படி கட்டிடம் உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும்.
9. வரன்முறைப்படுத்தி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'0" x 4'0" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்களின் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
10. எதிர்வரும் காலங்களில் மேற்படி மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதி குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கை மற்றும் அரசு துறை தணிக்கையால் தெரிவிக்கப்படும் கட்டணம் குறித்த குறைபாடு மற்றும் இதர ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டால் தாங்களே அதனை சரி செய்து தரப்பட வேண்டும்.
11. மனைப்பிரிவு சம்மந்தமான அவ்வப்பொழுது பிறப்பிக்கப்படும் அரசாணைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.
12. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை ஆகியோரின் அவர்களின் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் நெறிமுறைகளுக்குட்பட்டு நடக்க வேண்டும்.

P. [signature] 27/5/22
செயல் அலுவலர்,
கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி
திருவண்ணாமலை மாவட்டம்.

பெறுநர்:
திரு. பெருமாள்
எண்.54, இந்திராநகர்
கீழ்பென்னாத்தூர்–604 601

28
27/5/22

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
1. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்
2. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள்.
3. வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குனர், வேலூர் அவர்கள்.
4. திருவண்ணாமலை உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை உதவி இயக்குனர் அவர்கள்.

நகல்.
1. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கீழ்பென்னாத்தூர்
2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கீழ்பென்னாத்தூர்
3. அலுவலக கோப்பிற்கு,
4. இருப்பு கோப்பிற்கு.

## our services doesn't just end there

### Buying & Selling Services
Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services
Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals
Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services
Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services
Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We’re honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate